செ.வெ.எண்: 99 நாள்: 29-03-2021

**இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, வாக்குச்சாவடிகளுக்கு கொரோனா தடுப்பு பொருட்கள், அனுப்பும் பணி, திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலரும்,மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள்,பாளையங்கோட்டை அரசு பல்நோக்கு மருத்துவமணையில் இன்று (29-03-2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, வாக்குச்சாவடிகளுக்கு வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு கொரோனா தடுப்பு பொருட்கள், அனுப்பும் பணியினை, திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலரும்,மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள், பாளையங்கோட்டை அரசு பல்நோக்கு மருத்துவமணையில் இன்று (29-03-2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையம், தற்போதைய கொரோனா காலம் இருப்பதால், வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் நாளன்று வாக்களிக்க வரும் வாக்காளர்கள், முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன், வாக்களிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில், மொத்தமுள்ள (திருநெல்வேலி-408, அம்பாசமுத்திரம்-356, பாளையங்கோட்டை-389, நாங்குநேரி-395, இராதாபுரம்-376,) 1924 வாக்குச்சாவடிகளுக்கு, காய்ச்சல் கண்டறியும் கருவி, கைகழுவும் திரவம், முகக்கவசங்கள், கையுறைகள், உள்ளிட்ட கொரோனா பாதுகாப்புபொருட்கள், அடங்கிய தொகுப்புகள், தனித்தனியே அந்தந்த தொகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்படவுள்ளது. நமது மாவட்டத்திற்கு, வருகை புரிந்துள்ள தேர்தல் பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர், ஆகியோரின் அறிவுரையின்படி, தேர்தல் முன்னேற்பாட்டு பணிகள், தீவிரமாக நடைபெற்று வருகிறது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

நமது மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதிகளில், மொத்தமுள்ள 80 வயத்திற்கு, மேற்பட்டவர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் 3403 வாக்காளர்களுக்கு, தபால் வாக்குகளை நேரில் சென்று சேர்க்கும் பணிகளில், 109 குழுக்கள் ஈடுபட்டுவருகின்றனர். ஒவ்வொரு குழுவிலும் ஒரு நுண் பார்வையாளர், ஒரு காவல்துறை அலுவலர், ஒரு மண்டல அலுவலர், ஒரு மண்டல உதவியாளர், ஒரு வீடியோகிராபர், ஆகியோர் 80 வயத்திற்கு, மேற்பட்ட வாக்காளர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று வாக்குப்பதிவு செய்து, வாக்குச்சீட்டுகளை பாதுகாப்பு பெட்டிகளில் வைத்து, பாதுகாப்பாக கொண்டு வருவார்கள்.

நமது மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு பணிகள், தீவிரமாக கண்காணிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் நமது மாவட்டத்தில் கொரோனா நோய் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனவே, பொதுமக்கள் யாரும் இதுகுறித்து அச்சப்பட தேவையில்லை, குறிப்பாக கொரோனா நோய் பரவாமல் இருப்பதற்கு, பொதுமக்கள் அனைவரும் முகக்கவசங்கள் அணிந்து, சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டும், குறிப்பாக பொது இடங்களில் கண்டிப்பாக இதனை பின்பற்ற வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவிசந்திரன், துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.வரதராஜன், பல்நோக்கு மருத்துவமனை இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ஷர்மிளா, மற்றும் மருத்துவர்கள்,அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி